MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME - II ISSUE - 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

# சு.வெங்கடேசன் பார்வையில் பாரி

**முனைவர் சி.தேவி,**
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை,
தி ஸ்டாண்டர்டு ஃபயர்ஒர்க்ஸ் இராஜரத்தினம் மகளிர் கல்லூரி,சிவகாசி.
devi-tam@sfrcollege.edu.in - 9442436396

DOI 10.5281/zenodo.14788405.

**Abstract :**

Su.Venkatesan, a living writer, progressive thinker, and Member of Parliament, has also identified himself as a modern literary figure. He has written a novel, Velpari, based on some Sangam literary references. This article aims to see how Pari has been created from Venkatesan's perspective and how the younger generation has been introduced to Pari.

**Key Words :** Modern Literature - Novel - Velpari - Comparative Literature

வாழும் எழுத்தாளர், முற்போக்குச் சிந்தனையாளர், பாராளுமன்ற உறுப்பினர் என்ற நிலையில் உள்ள சு.வெங்கடேசன் அவர்கள் தன்னை நவீன இலக்கியப்படைப்பாளராகவும் அடையாளப்படுத்தியுள்ளார். அவர் சங்க இலக்கியக்குறிப்புகள் சிலவற்றை வைத்துப் புனையப்பட்ட புதினம் வேள்பாரி. வெங்கடேசன் பார்வையில் பாரி எவ்வாறு படைக்கப்பட்டுள்ளான், இளைய தலைமுறையினருக்கு பாரி பற்றியஅறிமுகம் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் காண்பதே இக்கட்டுரை.

வேள்பாரியில் பாட்டுடைத்தலைவன் பாரி. பாரியின் உயிர் பறம்பும் அங்கு வாழும் மக்களும் தான். பாணர்கள் போற்றும் மாண்புடையவனாக பாரி திகழ்ந்தான். பாணர்களின் பாடல்களே பாரியை உலகறியச் செய்தது. பாணர்கள் பாரி குறித்து பாடிய பனையன் மகனே பாடல் பாரியின் மீது அனைவருக்கும் அன்பு பெருக்கெடுப்பதற்கு காரணமாக அமைந்தது என்பதை,

**“முழு நிலா நாளில் அந்த அரிய காட்சியைக் காண வேண்டுமே, ஆதிமலை அடிவாரம், ஊர்மன்றலில் எல்லோரும் திரண்டிருக்க தொண்டகப்பறை முழங்க, பனையன் மகனே பனையன் மகனே எனப் பாடலைப் பாடத் தொடங்கினால் பறம்பு நாடே எழுந்து ஆடும்”**[1]
என்ற கூற்று புலப்படுத்துகின்றது.

**பாரியின் தோற்றம்**

பாரியின் தோற்றமே பார்ப்பவர்களுக்குப் பிரமிப்பை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது. நீண்ட உயரம், திரண்டு விரிந்து பரந்த திண்தோள்களை உடையவன்.எடலமைப்பு கம்பீரமான தோற்றத்துடன் இருப்பவன் பாரி. தோளில் தவழும் தலைமுடி பெற்றிருந்தான் என்பதை,“ **நெடு உயரம், திரண்டு விரிந்திருக்கும் தோள்கள், உடலமைப்பின் கம்பீரத்தைச் சொல்லின**”[2] என்ற கூற்றால் அறியலாம்.

**பாரியின் விருந்தோம்பல்**

**“தமிழன் என்றொரு இனமுண்டு**
**தனியே அவருக்கோர் குணமுண்டு”**[3]


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME - II ISSUE - 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

என்ற அடையாளமாய் இருப்பது விருந்தோம்பல் பண்பாகும். பறம்பு மக்கள் அனைவரும் பாரியுடன் கள் உணவு உண்ண விரும்பவர். கள் உணவுடன் ஓர் இரவு இசை மற்றும் நடனத்துடன் விருந்து உண்ணப்பாணர்கள் ஆசைப்படுவர். பாரி தனது நட்பிற்காக விநோதனமான விருந்து படைக்க விரும்புவான். ஆகவே தான் பாரியைக் காண கபிலர் வந்தபொழுது அவருக்கு மிக எளிதில் அகப்படாத சுவை மிகுந்த அறுபதாங்கோழி விருந்து படைக்கின்றான். அத்தி மதுவுடன் அறுபதாங்கோழிக் கறியை வைத்து கபிலருக்கு விருந்து அளிக்கின்றான். அதன் சுவை யாவரும் அறிந்தது. ஆயினும் விருந்தினர் மனம் மகிழ உண்ண வேண்டும் என்பதற்காகத் தனக்குக் கிடைக்கவில்லையாயினும் விருந்தினரை மனநிறைவுடன் பாரி உண்ணச்செய்தநிகழ்வை வேள்பாரி பதிவு செய்கின்றது.

**பல்லுயிர் பாதுகாவலன் பாரி**

பறம்பின் இயற்கையைத் தெய்வமாக வணங்கியவன் பாரி. பறம்பில் வாழும் மனிதர்கள் மட்டுமல்லாது விலங்குகள், பறவைகள், மரம், செடி, கொடிகள், யாவும் பாரிக்கு தன்னுயிர் போல்வனவாயிற்று. தன் இனங்காக்கும் போருக்கு பறம்பு வீரர்கள் தயாராகிக்கொண்டிருந்தனர். போருக்குத் தேவையான ஆயுதங்கள் தயாராகும் பாழி நகருக்கு அடிக்கடி சென்று வந்தான். கார் கால இரவு நேரத்தில் பாழி நகரம் செல்லும் பாரி தேரில் செல்லமாட்டான். காரணம், தன் இணையோடு மகிழ்ந்திருக்கும் உயிரினங்களின் மகிழ்வுக்கு இடையூறாக இருக்கக்கூடாது என்று கருதினான். இவ்வாறு பல்லுயிர் ஓம்பும் பண்பு பாரியிடம் இருந்ததை அறிய முடிகின்றது.

பாரியின் பல்லுயிர் ஓம்பல் என்னும் பண்பின் வெளிப்பாடாய் யானைகளைப் பாதுகாத்த தன்மையைச் சுட்டியுள்ளார். சோழர்கள் யானைப் படையுடன் பறம்பின் எல்லைக்குள் ஊடுருவிய பொழுது அவர்கள் வரும் பாதையில் ஒரு சிறு குளம் இருந்தது. அந்தக் குளத்தில் யானைகள் நிச்சயம் நீர்பருகும் என அறிந்த பறம்பு வீரர்கள் மனதில், பாரி நிச்சயம் குளத்திற்கு விஷம் வைத்து யானைகளைக் கொல்ல உடன்பட மாட்டான் என எண்ணினர். அதே போல் பாரியும் வேறு திட்டத்தைக் கூறினான். சங்கு அட்டை என்ற பூச்சையக் குளத்தினுள் போட்டான். அந்தச் சங்கு அட்டைகள் நீர் அருந்திய யானைகளின் துதிக்கையில் ஏறி யானைகளை நிலைகுலையச் செய்தது. சோழனின் யானைப்படையைக் கொண்டே சோழப் படையினர் பெரும்பான்மையினரைத் துரத்திவிரட்டினான்.

சோழர்களின் படை பின்வாங்கியதும் இரவாதனை அழைத்து, காட்டில் சங்கு அட்டையால் பாதிக்கப்பட்ட யானைகளுக்குத் தந்த முத்தர்களின் உதவியால் மருத்துவம் பாரக்கச்சொன்னான். இரவாதன், பாரியின் கட்டளையை ஏற்று யானைகளுக்கு மருத்துவம் பார்த்ததை, **“யானையின் துதிக்கைக்குள் சென்ற சங்கு அட்டைகள் ஒரு சில நாட்களில் தாமே செத்து உதிரும் வரை யானைக்கு வேதனை இருக்கத்தான் செய்யும். யாரையும் நெருங்க விடாது. தாக்குதலுக்குள்ளாகி இறந்த யானைகளைத் தவிரக் குற்றுயிராய் இருக்கும் யானைகளுக்கும் சிகிச்சை தேவைப்படும் யானைகளுக்கும் உதவ வேண்டியது நமது கடமை. நமது மலைகளுக்குள் பிளிறிக் கதறும் யானைகளுக்கு நாம் உதவியே ஆக வேண்டும். யானைகளுடனான ஆதி மொழியை உருவாக்கிய தந்தமுத்தத்தைச் சேர்ந்தவர்களை அழைத்து**


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

**அதற்கான ஏற்பாடுகளைச் செய் என்று இரவாதனுக்கு உத்தரவிட்டான் பாரி”**4என்ற கூற்று தெளிவுறுத்துகின்றது. எதிரிப்படையின் யானைகளாயினும் தங்கள் எல்லைக்குள் வந்து வருந்தும் யானைகளுக்கு உரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்ற பாரியின் மாண்பு போற்றுதற்கு உரியதாகும்.

பறம்பின் பல பகுதிகளில் பல மக்கள் வாழ்ந்து வந்த நிலையில் பாரி, மலையின் ஒவ்வொரு பகுதி மக்களையும் வாஞ்சையோடு அணைத்துக் காத்தான். நீலன், மயிலா திருமணத்தின் பொழுது மணவிழாவிற்கு வந்த ஒவ்வொருவரையம் தனித்தனியே அணுகி நலம் விசாரித்தான். பாரியைக் காண வேண்டும் என்ற ஆவலில் கரியனூர் பெரியாத்தா கீழ்மலையிலிருந்து ஏறி வந்தார். அவரைக் கண்டதும் பாரியின் கண்கள் மகிழ்ச்சியில் திழைத்தன.பாரியின்; தந்தையைக் குழந்தையாகக் கண்ட பெரியாத்தா பாரியை ‘ என் அப்பனடா நீ ’ என்று மகிழ்ந்து அழைத்தாள். இந்த அன்பின் பிணைப்பில் பாரி,“**தள்ளாத வயதில் இவ்வளவு தொலைவு வர வேண்டுமா எனப் பாரி கேட்டதற்கு, இனி நான் மலையேறி எவ்வியூருக்கு வந்து உன்னையப் பாக்க வருவேன்னுதான் காத்திருந்தேன். மணநாளுக்கு வருவேன்னு எனக்குத் தெரியும். அதனாலதானப்பா எப்படியாவது ஒன்னையப் பாத்திடணும்ன்னு ஓடிவந்தேன்”**5 என்ற இக்கூற்றினால் அன்பின் ஆழத்தை அறிய முடிகின்றது.

மேலும் பெரியாத்தாவைக் கண்டதும் பாரி,**“சூல் மருது எப்படி இருக்கிறது? எனக் கேட்டான்.... பாரியின் நலங்கேட்டல்கள் எல்லாம் இப்படித்தான். மரம் செடி கொடி,விலங்குகள், மனிதர்கள் என ஒன்று விடாமல் கேட்டுக்கொண்டிருந்தான்”**6 என்ற கூற்று பாரி பறம்பின் இயற்கையால் கொண்ட அன்பைப் புலப்படுத்துகின்றது. பெரியாத்தா வீட்டிற்கு அருகில் இருந்த மரம் சூல்மருது. அது எப்படி உள்ளது என விசாரிப்பதில் இருந்து குறிஞ்சித் தலைவன் பாரி என்பது தெளிவுபடுகின்றது. பாரியின் பல்லுயிர் ஓம்பல் பண்பு புலனாகின்றது.

**பாரியின் தலைமைப் பண்பு**

வேளிர் குலத் தலைவன் பாரி வேளிர் குலத்துக்கு மட்டுமல்லாது அழிவின் விளிம்பில் இருந்த பல்வேறு இனக்குழுக்களின் தலைவனாகத் திகழ்ந்தான். பறம்பின் பெருவிழாவான கொற்றவைக் கூத்தில் பாரி இனக்குழுக்கள் மீது கொண்ட அளவிடற்கரிய அன்பை அறிய முடிகின்றது. கொற்றவைக் கூத்து நிகழும் இறுதி நாளில் பாரியின் குலப்பாடல் இடம்பெற்றது. பாரி கொற்றவைக் கூத்தின் களம் புகுந்து கொற்றவைக்கு காட்டெருமையைப் பலியிட்டு கொற்றவைக் கூத்து நிகழ்த்தி அனைத்து இனக்குழுவையும் காக்க என் உயிரையும் கொடுப்பேன் எனச் சபதம் மேற்கொண்டதை,

**“இன்றைய நாள் வேளிருக்கு உரியது. வந்துள்ள அத்தனை குடிப்பாணர்களின் இசைக்கருவிகளும் ஒரு சேர முழங்கும். காடு கிடுகிடுக்க காண்போர் நடுநடுங்க களமிறங்கி ஆடுபவன் வேள்பாரி. கொற்றவைக்கு முன் காட்டெருமையைப் பலியிட்டு, மேலெல்லாம் குருதி பூசி நிலம் நடுங்க ஆடுவான். பறம்பின் எல்லைக்குள் வந்த குலங்களின் கண்ணீர் துடைக்க உயிரையும் தரச் சித்தம் என உருகிச் சொல்லும் பெருநாளிது”**7 என்ற கூற்றால் அறியலாம்.

**இனக்குழுக் காவலன் பாரி**


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

பாரி இனக்குழுக் காவலனாகத் திகழ்ந்தான். பறம்பில் திரையர்கள் வந்து தேவவாக்கு விலங்கைக் கவர முற்பட்ட போது பாண்டியனிடமிருந்து திரையர்களை மீட்க நீலன் தலைமையில் தனது படையை அனுப்புகின்றான். நீலன் தலைமையிலான படை பாண்டிய நாட்டினுள் பல தடைகளுக்கும் இடையே சென்று திரையர்களை மீட்டு வந்ததை, **"திரையர்கள் மட்டும நெருப்பைத் திரும்பிக் கூட பார்க்காமல் பாண்டியனின் கோட்டையை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர்"**8 என்ற கூற்று தெளிவுறுத்துகின்றது.

**கலைஞர்களின் தலைவன் பாரி**

பாரி என்ற இனக்குழுத் தலைவன் குறித்த சிறப்புகளை நிலங்கள் தோறும் எடுத்துச் சென்றவர்கள் பாணர்கள். அதே போல் பாரிக்கும் பாணர்களுக்கும் மட்டுமல்ல கலைஞர்களாகிய கிணைஞர், அகவன் மக்கள், கூத்தர் என யாவருக்கும் பாரியுடன் நெருங்கிய தொடர்பு உண்டு. கலைஞர்களின் வருகைக்காகப் பாரி காத்திருப்பான். அவர்கள் பறம்பில் ஏறியதும் மிகுந்த மகிழ்வடைந்து இரவெல்லாம் கூத்து தொடரும். கலைஞர்களோடு கலைஞனாக மாறி பாரி மகிழ்வான். ஏதிரிகளால் பறம்கை வெல்ல இயலாது. ஆனால் ஒரு விறலி போதும் அவன் நாட்டைப் பெற என்ற பேச்சு வழக்கே உண்டு. அந்த அளவிற்குப் பாரி கலைஞர்கள் நிகழ்த்தும் கூத்தில் மூழ்கிவிடுவான். கிணைஞர் பாடும் திரையர்கள் குறித்த பாடலில் காலம்பனின் மண்ணின் வெற்றிச் சிறப்பைப் பாடும் பொழுது பாரி தொடையில் தட்டி மிடற்று உலி எழுப்பி ரசிதத தன்மையினை, **"அகல விரிந்த கையால் ஒரு முகப்பறையை ஓங்கியடித்துப் பேரொலி எழுப்புதைப் போலத் தனது தொடையிலடித்து ஒலியெழுப்பினான் பாரி. ஆடுவன் கூட்டம்தாக்குதலின் வலிமையை வர்ணிக்கத் தொடங்கிய பொழுது பாரியால் இருக்கையில் உட்கார முடியவில்லை. காலம்பனின் வீரச்செயல் பறம்புக்குடிகளுக்கே பாடம் சொன்னது"**9 என்ற கூற்று தெளிவுறுத்துகின்றது.

**வானியல் நிபுணன் பாரி**

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆதிமலையின் பாறைப்பிளவுக்கு இடையே சூரியன் மேலெழும்பொழுது அது ஒரு ஒளிவாள் போன்று காட்சி தரும் என்பதையும் அதன் சூரியக்கீற்று இறங்கும இடத்தையும் துல்லியமாகப் பாரி அறிந்து வைத்திருந்தான். அந்த அரிய காட்சியைக் காண்பதற்காகக் கபிலரை அழைத்துச் சென்று சரியாக ஒளிவாளின் வீச்சு அவர் மேல் ஊடுருவும் படி நிறுத்தினான். அந்த ஒளிவாள் தன் மீது ஊடுவும பொழுது கபிலர் அடைந்த மகிழ்வுக்கு எல்லையே இல்லை. பாரியின் இந்த வானியல் அறிவைக கபிலர் வியந்து பார்த்ததை, **"பெருங்கணியன் திசைவேழர் இந்த நாளில் தன்னோடு இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும்? பாரியைக் கட்டி அணைத்திருப்பர். வேந்தர்கள் யாருக்கும் இல்லாத நாள் அறிவும் கோள் அறிவும் பாரியிடம் இருப்பதைக் கண்டு திகைத்திருப்பார்"**10 என்ற கூற்றால் அறியலாம்.

இயற்கையின் பேராற்றலைப் பாரி நன்கு அறிந்து வைத்திருந்தான். கார்காலத்தின் தொடக்கத்தில் மழைப்பொழிவு ஆரம்பமாகும். மழைப்பொழிவினை நான்கு பருவங்களாகப் பிரித்து வைத்திருந்தனர்.

கார்த்திகை விண்மீன் குறித்து பாரி கபிலரிடம் கூறும் பொழுது, கார்த்திகை விண்மீன் நகர்வுதான் அனைத்துப் பருவங்களையும் தீர்மானிக்கின்றன என உரைத்தான். பாரி


http://Creativecommons.org//license/by/4.0/.

E-ISSN : 2584 - 1238

கபிலரிடம்,கார்த்திகை விண்மீன் கூட்டம் நிலவுடன் சேர்ந்திருக்கும் காலம் கார்காலமாகவும் சூரியனுடன் இணைந்து இருக்கும் காலம் வேனிற் காலமாகும் என்று வானியலை உணர்த்தினான்.இந்த நட்சத்திக்கூட்டங்கள் கார்காலத்திற்கும் தீக்கும் காணமாகியதால் கார்த்தீ என அழைக்கப்பட்டன. இந்த ஆறு விண்மீனகளின் இயக்கத்தைக் கொண்டு தான் ஒரு நாளை அறுபது நாழிகையாகவும், கால சுழற்சியை அறுபது ஆண்டுகளாகவும் பிரித்தனர் எனப் பாரி கபிலருக்கு விளக்கினான்.

கார்த்திகையின் மற்றுமொரு குறியீடு சேவல் மற்றும் மயில் ஆகும். சூரியனைக் கண்டதும் சேவல் ஒலி எழுப்பத் தொடங்கும். கார்காலத்தைக் கண்டதும் மயில் தோகை விரித்தாடும். ஆகவே கார்த்திகையின் அடையாளமாக, முருகன் சேவலைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் கொண்டான் என்ற கூற்று பாரியின் வானியல் அறிவை எடுத்துரைக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

**பாரியின் வீரம்**

பாரி பறம்பின் தலைவனாதலால் பறம்பு மலையின் திடீர் தாக்குதலைக் கூட சமாளிக்கும் திறன் படைத்தவன் பாரி ஆவான். பாரியும் கபிலரும் காட்டில் நடந்து சென்று கொண்டிருக்கும பொழுது ஒரு புதரில் இருந்து மற்றொரு புதருக்குள் ஒரு செந்நாய் பாய்ந்து ஓடுகின்றது. அதனைக் கண்ட பாரி கணப்பொழுதில் அதனைப் பின்தொடர்ந்து சென்று அதன் மீது தனது வேலை வீசிக் கொன்ற தன்மையை, **“தன் போக்கில் போகும் விலங்கை ஈட்டி எறிந்து கொல்லும் செயல், கபிலருக்கு நடுக்கத்தை ஏற்படுத்தியது. பாரி தானா இது? எனப் பதறியபடிப் பார்த்தார்”**11 என்ற கூற்றால் அறிய முடிகின்றது. பொதுவாக பறம்பின் ஒவ்வொரு உயிர்கள் மீது மிகுந்த அன்புடையவன் பாரி. பிற விலங்குகள் தனது உணவுப் பசிக்காக உயிர்களை வேட்டையாடும். ஆனால் செந்நாய் எக்காரணமும் இன்றி சென்ற இடங்களில் எல்லாம் வேட்டையாடும் என்பதால் அதனைப் பாரி வீழ்த்துகின்றான்.

**முடிவுரை**

‘கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்;’12 என்ற புகழ் மொழிக்கேற்ப பாரியும், முல்லைக்குத் தேர் ஈந்து பல்லுயிர் பேணல் பண்புடையவனாய், போராற்றல் மிக்க வீரனாய், வேந்தர்களை அறிந்து அவர்களிடமிருந்து மக்களைக் காக்கும் காவலனாய், கற்றறிந்த சான்றோருக்கு மதிப்பளிக்கும் மாண்பாளனாய் நற்பண்புகளின் மொத்த உருவாகத் திகழ்ந்த பாரி இனக்குழுக்களின் காவலனாகவும் திகழ்ந்தான்.பாரி என்ற வீரயுக நாயகனின் ஒப்பற்ற இயல்புகள் இற்றைக் காலத்தவர்க்கு தக்க பாடமாக அமைய வேண்டும். அக்கால மக்களின் பண்பட்ட வாழ்விற்கான பதிவாக இந்நூல் அமைகின்றது எனலாம். பண்பாட்டுத்திரிபுகள் ஏற்பட்டுள்ள இன்று இது மிகவும் அவசியமான ஒரு பாடம்.

**அடிக்குறிப்புகள்**

1. வே.பா.ப.38,தொ1
2. வே.பா. ப. 87,தொ1
3. நாமக்கல் கவிஞர்,தமிழன் பெட்பு,19
4. வே.பா.ப. 03,தொ2


http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME - II ISSUE - 2 FEB -2025
E-ISSN : 2584 - 1238

5. வே.பா.ப. 227,தொ2
6. வே.பா. பக். 227-230,தொ 2
7. வே.பா.ப. 96,தொ1
8. வே.பா.ப. 606, தொ1
9. வே.பா.ப. 11, தொ2
10. வே.பா.ப. 124,தொ.1
11. வே.பா. ப. 161, தொ.1.
12. பாரதப்பண்பாட்டு தளத்தில் பாரதி அ.சீனிவாசன் ப. 49


http://Creativecommons.org//license/by/4.0/.